## 2026 சட்டமன்றத் தேர்தலில், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2.4.2026 அன்று வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:



● கழக நிர்வாகிகள் – தொண்டர்கள் – கூட்டணி கட்சித் தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று டாக்டர் பெசன்ட் சாலையில் அமைந்துள்ள தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.









● சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 116, 116 (அ) மற்றும் 115 ஆகிய கழக வட்டங்களில் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.

### தலைமை அரசு குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா ஆணித்தரமான வாதம்!

# அமைச்சரவையின் பரிந்துரைகளை ஆளுநர் தன்னிச்சையாக நிராகரிக்க முடியாது!

## சென்னை உயர் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் அமர்வு பரபரப்பு தீர்ப்பு!

சென்னை, ஏப். 3 -

பல ஆண்டுகளாக சிறையிலிருக்கும் தண்டனை கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் தமிழ்நாடு அமைச்சரவையின் பரிந்துரைகளை ஆளுநர் நிராகரித்ததின் அடிப்படையில் போடப்பட்ட உத்தரவுகளை எதிர்த்து பல்வேறு வழக்குகள் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் நீதிபதிகள் எம் எஸ்,ரமேஷ் மற்றும் லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பென்ச் முன்பு கடந்த ஆகஸ்ட் மாதம் விசாரணக்கு வந்தது. அப்போது, இரண்டு நீதிபதிகள் அடங்கிய இரு வேறு தீர்ப்புகள் மாறுபட்ட உத்தரவுகளை பிறப்பித்திருப்பதால், அதனை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க தலைமை நீதிபதிக்கு கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்பி, பரிந்துரை செய்திருந்தனர்.

1.தண்டனை குறைப்பு மற்றும் முன் கூட்டியே விடுதலை செய்யும் அரசின் அமைச்சரவை முடிவுக்கு கவர்னர் கட்டுப்பட்டவரா?

2.மேற்கண்ட வழக்குகளில் எந்தெந்தெ சூழல்களில் அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்படாமல் ஆளுநர் தன்னிச்சையாக செயல்பட முடியும்?

இந்த வழக்கு கடந்த வாரம் நீதிபதிகள் ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா, ஜி.கே. இளந்திரையன் மற்றும் சுந்தர் மோகன் அடங்கிய மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், மனோகரன், சைஃபுல்லா உள்ளிட்டோர் ஆஜரானார்கள்.

அரசு தரப்பில் மாநில தலைமை அரசு குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா ஆஜராகி ”அரசியலமைப்பு ஷரத்துகளின் படி ஆளுநர் அமைச்சரவையின் அறிவுரையின்படி மட்டுமே செயல்பட முடியும் என தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்ற ஏழு நீதிபதிகள் கொண்ட ஷம்ஷேர் வழக்கின் தீர்ப்பின் படி கவர்னர் நிர்வாக செயல்பாடுகளில் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க முடியாது, அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் பரிந்துரையின் படியே செயல்பட முடியும் என உறுதிபடுத்தியுள்ளது.

**உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு!**

அதே போன்று உச்சநீதிமன்ற ஐந்து நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாஸன அமர்வான மரு ராம் வழக்கில் ஆளுநர் பெயரளவிலான தலைவர் ( Symbolic Head) மட்டுமே. முன்கூட்டியே விடுதலை செய்யும் அமைச்சரவையின் முடிவுகளில் ஆளுநர் ஒப்புதலின்றி கூட அரசு உத்தரவு போட முடியும் என கூறியுள்ளது. இவை அனைத்தையும் பேரறிவாளன் வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்பற்றியுள்ளது. எனவே ஆளுநர் முன் கூட்டியே விடுதலை செய்யும் அமைச்சரவையின் முடிவை நிராகரிக்க அதிகாரம் இல்லை என வாதிட்டார்.

மனுதாரர் வழக்கறிஞர்களும் இதே கருத்தை முன் வைத்தனர். அனைவரது வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்தி வைத்தனர்.

**மூன்று நீதிபதிகள் தீர்ப்பு!**

நேற்று (2.4.2026) இந்த வழக்கின் தீர்ப்பினை நீதிபதிகள் ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா, ஜி.கே.இளந்திரையன் மற்றும் சுந்தர் மோகன் அடங்கிய மூன்று நீதிபதிகள் ”தண்டனை குறைப்பு மற்றும் முன் கூட்டியே விடுதலை செய்யும் அரசின் அமைச்சரவை முடிவை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தன்னிச்சையாக முடிவெடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கு கிடையாது. ஆளுநர் அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டவர் என தீர்ப்பளித்தனர்.

### 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் மேலும் தொடர்ந்திட

# தி.மு.க. அணியின் வெற்றிக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி பணியாற்றும்!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஏப்.3

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள், அதன் மூலம் அடைந்திருக்கிற இரட்டை இலக்கு பொருளாதார வளர்ச்சி போன்றவை தொடர்ந்து, தமிழ்நாட்டை மேலும் அடுத்த நிலைக்கு கொண்டு சென்றிட திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவது அத்தியாவசியத் தேவையாகிறது.

எனவே விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யவில்லை என்கிற மன வருத்தத்தை ஒதுக்கிவிட்டு, மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட தமிழ்நாடு முழுவதும் திமுக தலைமையிலான அணி வெற்றி பெற்றிட விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியினர் களப்பணி ஆற்றிட வேண்டும்.



கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கட்டணமில்லா விடியல் பயணம், காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், கலைஞர் கனவு இல்லம், வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை, கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான புதிய திட்டங்கள் போன்ற இந்திய நாடே பின்பற்றக்கூடிய சிறப்பானத் திட்டங்களை அறிவித்து அதனை கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியால் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால் தமிழ்நாட்டின் பல தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர். கல்வி, மருத்துவம் போன்றவற்றில் தலை சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. பெண் தொழிலாளர்கள் அதிகம் பணிபுரியும் மாநிலமாக உயர்ந்துள்ளது. கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு வாரியங்களில் பல்வேறு புதியதுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டும் நலத்திட்ட உதவிகள் உயர்த்தப்பப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதனால் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் 38 லட்சம் தொழிலாளர்கள் நல வாரியங்களில் புதிதாக பதிவுப் பெற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சாதனைகளால் தமிழ்நாடு 11.19 சதம் என்ற இரட்டை இலக்கை அடைந்து இந்தியாவின் உயரிய பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாக நிமிர்ந்து நிற்கிறது.

இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தது. ஆனால் அதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அந்த வருத்தம் அடிமட்ட தொண்டர் வரையில் இருப்பது இயல்பே. இருந்தாலும் நாட்டின் நலன் மற்றும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, அந்த வருத்தத்தை ஒதுக்கி வைத்து விட்டு, திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைந்து, முதலமைச்சராக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று, மேற்படி பணிகள் தொடர்ந்திட அனைத்து நிர்வாகிகளும் களப்பணி ஆற்றிட வேண்டும்.

குறிப்பாக நல வாரியத்தின் மூலம் பயன்பெற்ற லட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் இல்லங்கள் தோறும் சென்று, திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டு, வாக்குகளை இந்த அணிக்கு கொண்டு வந்து சேர்த்திட வேண்டும். நான் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. அணியின் வெற்றிக்கு வாக்கு சேகரிக்க உள்ளேன்.

இவ்வாறு பொன்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் பி.கே.சேகர்பாபு, எழும்பூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் தமிழன் பிரசன்னா, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கார்த்திக் மோகன், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ஏ.பி.பூர்ணிமா ஆகியோர் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்ட ம.முகிலன் மற்றும் டி.தாமோதரன் ஆகியோர் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., வட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மாவட்ட அமைப்பாளர் சரவணன் ஆகியோர் உள்ளனர்.